சுற்றறிக்கை இல. 1995/11

எனது இல. 4 இதா / 1
கல்வி உயர்கல்வி அமைச்சு,
""இசுருபாய"", பத்தரமுல்ல.
1995.01.31

எல்லா : மாகாணக் கல்விப் பணிப்பாளர்களுக்கும்
மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்களுக்கும்
பிரதிக் கல்விப் பணிப்பாளர்களுக்கும்

## ஆசிரியர் இடமாற்றத் தேசியக் கொள்கை

கல்வித்துறை நடவடிக்கைகளைக் கருத்துற்ற முறையிற் செயற்படுத்துவதையும் மாணவர்களும் ஆசிரியர்மறும் உச்ச அறிவலலான சேமநலன்களையும் நன்மைகளையும் பெறுவதற்கு வழி செய்வதையும் கருத்திற் கொண்டு ஆசிரியர்களுடைய இடமாற்றத்திற்குரிய தேசியக் கொள்கை ஒன்றினை வகுப்பதற்கு அரசாங்கம் முடிவு செய்துள்ளது. இத்தேசியக் கொள்கையானது பின்வரும் நியமங்களின் அடிப்படையில் அமைய வேண்டுமென அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

அ கல்வி மாணவர்களை மையமாகக் கொண்டதாக அமைய வேண்டுமென்பதனால் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் மாணவர்களுடைய தேவைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படல் வேண்டும்.

ஆ கல்வித் தரத்தின் மேம்பாடு ஆசிரியர்களுடைய அறிவு ஆற்றல் ஆகியவற்றைச் சார்ந்தது என்பதனால் ஆசிரியர்களுடைய அறிவு ஆற்றல் ஆகியவற்றின் மேம்பாட்டை வளர்ப்பதற்குரிய முறையிலேயே ஆசிரியர் இடமாற்றக் கொள்கை அமைதல் வேண்டும்.

இ ஆசிரியர்களுடைய தொழிற்பாதுகாப்பு கல்வித்துறைச் சுதந்திரம் தொழில் பற்றிய திருப்தி ஆகியற்றை உறுதிப்படுத்தும் வகையிலேயே ஆசிரியர் இடமாற்றக் கொள்கை வகுக்கப்பட வேண்டும். அத்துடன் நியாயமற்ற இடமாற்றம் பற்றிய அச்சமின்றி போதிய நம்பிக்கையுடன் ஆசிரியர் கடமையாற்றுவதற்குரிய ஏற்பாடும் இதில் இடம் பெற்றிருத்தல் வேண்டும்.

ஈ கல்வி நடைமுறையிற் பிராந்தியங்களுக்கு இடையே காணப்படும் முரண்பாடுகளை முடிந்தளவுக்குக் குறைத்துக் கொள்வது இக்கொள்கையின் முக்கிய குறிக்கோள்களுள் ஒன்றாகும்

உ போதிய அளவில் கிடைக்கப்பெறாத கல்வித்துறை மனித வளங்களைத் தூர இடங்களிலுள்ள மக்களும் பெறத்தக்க வகையிலே அவை சமவளவில் பங்குடப்படுவதையும் ஆசிரியர் இடமாற்றக் கொள்கை உறுதி செய்தல் வேண்டும்

ஊ. கல்வித்துறையிற் போதியளவு கிடைக்கப்பெறாத மனித வளங்களை உரிய முறையில் கையாளுகையைச் செய்வதன் மூலம் அவற்றிலிருந்து உச்சப் பயனைப் பெறுவதற்கு வழிவகுப்பதாகவும் இக்கொள்கை அமைதல் வேண்டும்.

எ ஆசிரியர் ஒருவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள அல்லது எடுப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள சந்தர்ப்பங்களில் அதற்குரிய நடைமுறைகளுக்கு வசதியாகச் செய்யப்படும் இடமாற்றங்கள் தவிர ஏனைய ஆசிரியர் இடமாற்றங்கள் எல்லாம் உரிய முறையில் அமைக்கப்பட்ட ஒரு ஆசிரியர் இடமாற்றச் சபையின் சிபார்சுகளின் அடிப்படையிலேயே செய்யப்படல் வேண்டும்.

02. ஆசிரியர் ஒருவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள அல்லது எடுப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள சந்தர்ப்பங்களும் சுகவீனத்தைக் காரணம் காட்டி இடமாற்றம் கோரப்படும் சந்தர்ப்பங்களும் சேவையதன் அவசரத்தேவைகுறித்து இடமாற்றஞ் செய்யப்படும் சந்தர்ப்பங்களும் தவிர ஏனைய சந்தர்ப்பங்களில் உரிய முறையில் அமைக்கப்பட்ட இடமாற்றச் சபையின் சிபாரிசுகளின் அடிப்படையில் மாத்திரமே ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யப்படல் வேண்டும். சேவையின் அவசரத் தேவை குறித்து செய்யப்பட்ட ஓர் இடமாற்றம் பற்றி இடமாற்றக்கடிதத்தின் தேதியிலிருந்து ஒரு வாரங்களுக்குள் இடமாற்றச் சபைக்கு அறிவித்தல் வேண்டும்.

03. ஆசிரியர் இடமாற்றச் சபைகள் பின்வரும் மட்டங்களில் அமைக்கப்படல் வேண்டும் :

1. வலயக் கல்வி அலுவலகம்
2 மாகாண / மேலதிக மாகாணக் கல்வி அலுவலகம்
3 தலைமை அமைச்சு.

04. தாபனக் கோவையின் இரண்டாம் அத்தியாயத்தின் 5 ஆம் பிரிவின்படி ஆசிரியர் இடமாற்றச் சபைக்கு நியமிக்கப்படும் உறுப்பினர்களுடன் நாட்டின் ஒன்றுக்கு மேற்பட்ட மாகாணங்களைச் சேர்ந்த ஆசிரிர்களை உறுப்பினர்களாகக் கொண்டுள்ளதுடன் தொழிற்சங்கப் பிரமாணத்தின்படி பதிவு செய்யப்பட்டுள்ள ஆசிரியர் சங்கம் ஒவ்வொன்றினதும் ஒரு பிரதிநிதியும் இடமாற்றச் சபைக்கு நியமிக்கப்படல் வேண்டும்.

05. பாடசாலைகளின் வரககள் : எல்லாப் பாடசாலைகளும்பின்வருமாறு வகைப்படுத்தப்படும்

(அ) மிகவுகந்த
(ஆ) உகந்த
(இ) கஷ்ட
(ஈ) மிகக்கஷ்ட

06. காலஅட்டவணை :

மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் ஏற்படும் அசௌகரியங்களை முடிந்தளவு குறைத்துக்கொள்ளுதற் பொருட்டு மேலே 2 ஆம் பந்தியிற் குறிக்கப்பட்டுள்ள சந்தர்ப்பங்கள் தவிர ஏனைய சந்தர்ப்பங்களில் வருடத்தின் ஆரம்பத்திலேயே ஆசிரியர்கள் இடமாற்றஞ் செய்யப்படல் வேண்டும்

07. விண்ணப்பங்களைக் கோருதல்.

ஆசிரியர்களின் வருட இடமாற்றத்துக்குரிய விண்ணப்பங்கள் ஒவ்வொரு வருடமும்யூன் முதலாம் தேதிக்கும் யூன் 30 ஆம் தேதிக்குமிடையிற் கோரப்பட வேண்டும்.

08. இடமாற்றச் சபைகளின் கூட்டங்கள்

கிடைக்கப்பெற்றுள்ள விண்ணப்பங்களை ஆராய்தற் பொருட்டு இடமாற்றுச் சபைகள் ஒவ்வொரு வருடமும் ஆகஸ்த்து முதலாம் தேதிக்கும் ஆகஸ்த்து 31 ஆம் தேதிக்குமிடையிற் கூடுதல் வேண்டும்.

09. தரவுகளையும் தகவல்களையும் சேகரித்தல்

ஒவ்வொரு வருடமும் யூலை 31 ஆம் தேதிக்குமுன்னர் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஆசிரியர் இடமாற்றங்கள் பாடசாலைகளிலுள்ள வெற்றிடங்கள் கொள்ளுதல் வேண்டும்

10. கடிதங்களை வழங்குதல்

வருட இடமாற்றங் கடிதங்கள் ஒவ்வொரு வருடமும் செத்தெம்பர் 15 ஆம் தேதியளவில் வழங்கப்படல் வேண்டும்

11. மேன்முறையீடுகள்

ஒவ்வொரு வருடமும் செத்தெம்பர் 15 ஆம் தேதிக்கும் ஒற்றோபர் 15 ஆம் தேதிக்குமிடைப்பட்ட காலப்பகுதியில் மேன்முறையீடுகள் ஏற்றுக் கொள்ளப்படும்.

12. மேன்முறையீட்டுச் சபையின் தீர்மானங்கள்

ஒற்றோபர் 15 ஆம் தேதிக்கும் நவம்பர் 30 ஆம் தேதிக்குமிடைப்பட்ட காலத்தில் எல்லா மேன்முறையீடுகளும் மேன்முறையீட்டுச் சபைகளினால் ஆராயப்பட்டு தீர்மானங்கள் நவம்பர் 30 ஆம் தேதிக்கு முன்னர் அறிவிக்கப்படும்.

13. மேலே குறிப்பிடப்பட்ட நடைமுறைக்கு அமையாது சுகவீனம் ஒத்துமாறும் வேண்டுகோள்கள் தகுதியான காரணங்காட்டி ஆசிரியர் செய்யும் வேண்டுகோள்கள் ஆகியன குறித்தும் ஆசிரியர் இடமாற்றப்படலாம். ஆயின் இவ்வாறான இடமாற்றங்கள் தேசிய கொள்கையில் விதிக்கப்பட்டுள்ள வரம்புக்கு உட்பட்டதாக இருத்தல் வேண்டும்.

14. இந்தச் சுற்று நிருபத்தில் குறிப்பாகக் கூறப்பட்டுள்ள சந்தர்ப்பங்கள் தவிர எனைய எல்லா ஆசிரியர் இடமாற்றங்களுக்கும் யாப்பின் மூன்றாம் அத்தியாயத்தின் ஏற்பாடுகள் பொருத்தமுடையனவாகும். இந்த ஏற்பாடுகள் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் கைக்கொள்ளப்பட வேண்டும்.

15. <u>ஆசிரியர் இடமாற்றக் கொள்கையை செயற்படுத்தல்.</u>

இலங்கை ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்பில் விதிக்கப்பட்டுள்ளவாறு நிலையியற் குழுவினால் குறிப்பிடப்பட்ட பாடசாலை ஒன்றிலே இழிவளவான சேவைக் காலத்தை ஒவ்வொரு ஆசிரியரும் பூர்த்தி செய்துள்ளார் என்பதை அதிகாரிகள் உறுதிசெய்து கொள்ள வேண்டும். மிகக் கஷ்ட பாடசாலைகளுக்குரிய இழிவளவான சேவைக்காலம் 3 ஆண்டுகள். கஷ்ட பாடசாலைகளுக்கு இது 4 ஆண்டுகளாகும். ஓர் ஆசிரியர் உகந்த பாடசாலை ஒன்றிலே சேவை செய்ய வேண்டிய உச்சக் கால எல்லை 6 ஆண்டுகளுமாகும்.

16. சுகவீனம் காரணமாக இடமாற்றம் கோரி ஆசிரியர் ஒருவர் சமர்ப்பிக்கும் விண்ணப்பத்துடன் சம்பந்தப்பட்ட விடுமுறையைச் சொந்த வைத்திய நிபுணர் ஒருவரிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட வைத்திய சான்றிதழும் பிணியாய்நிலைய அட்டைகளும் சமர்ப்பிக்கப்பட வேண்டும். கர்ப்பிணித் தாய்மார்கள் போதிய காரணங்களாக ஏற்றுக் கொள்ளப்படும் சம்பந்தப்பட்ட ஆசிரியருடைய சுய சௌக்கியத்துடன் ஆசிரியருடைய குடும்பத்தின் பின்வரும் உறுப்பினர்களுடைய சௌக்கியமும் கவனிக்கப்படும்.

(அ) கணவன் / மனைவி
(ஆ) பிள்ளைகள்
(இ) ஆசிரியர் விவாகமாகாதவர் ஆயின் தங்கியிருக்கும் பெற்றார்

17. இலங்கை அதிபர் சேவை இலங்கை கல்வி நிருவாக சேவை ஆகியவற்றைச் சேர்ந்த அலுவலர்களுடைய இடமாற்றங்கள் முடியுமான சந்தர்ப்பங்களிலே ஆசிரியர் இடமாற்றத் தேசிய கொள்கைக்கு இணையாகச் செய்யப்படுதல் வேண்டும்.

18. முதல் நியமனம் : சேவையிற் சேர்த்துக் கொள்ளப்படும் ஆசிரியர்களுக்குப் பின்வரும் இரு வகையான பாடசாலைகளில் ஒன்றிலேயே முதல் நியமனம் வழங்கப்படும்.

(அ) கஷ்ட
(ஆ) மிகக்கஷ்ட

19. நானாவித விடயங்கள் :

இதுவரை காலமும் ஒரு மிகக்கஷ்ட அல்லது கஷ்டப் பிரதேசத்திலே சேவை புரியாத ஆசிரியர்கள் அனைவரும் இப்படியான ஒரு பாடசாலையில் ஒரு இழிவளவான காலப்பகுதிக்குச் சேவைபுரியுமாறு மாற்றப்படுவார்கள். ஆயின் 53 வயதுக்கு மேற்பட்ட ஆசிரியர்கள் அவ்வாறு மாற்றப்பட மாட்டார்கள்

20. இச்சுற்று நிருபம் மூலம் வழங்கப்படும் தேசிய கொள்கையின்படி எல்லா இடமாற்றச் சபைகளும் நடைமுறை கைநூல் ஒன்றைத் தயாரித்து அதனை எல்லாச் சந்தர்ப்பங்களிலும் பின்பற்றுதல் வேண்டும். இச்சுற்று நிருபத்திலே விதிக்கப்பட்டுள்ள தேசியக் கொள்கை அமைச்சரவையினால் 1995 சனவரி 18 ஆம் தேதி தடத்தப்பட்ட அதன் கூட்டத்திலே அங்கீகாரிக்கப்பட்டுள்ளது. இடமாற்றங்களைச் செய்யும் அதிகாரிகள் அனைவரும் இக்கொள்கையைக்கைக் கொள்ளுதல் வேண்டும்

சேனாணாயக்க உடபசேன,
மேலதிகச் செயலாளர்

ஒ / இ. எம். ட. ட. பீரிஸ்
செயலாளர்,
கல்வி, உயர்கல்வி அமைச்சு,

பிரதிகள் :
1) செ/ க. சே. ச
2) எல்லா மகாகணச் செயலாளர்களுக்கும்
3) எல்லா மாகாணக் கல்விச் செயலாளர்களுக்கும்
4) க. உ. க. அமைச்சின் சகல பிரிவுத் தலைவர்களுக்கும்
5) பணிப்பாளர் நாயம் தே. க. நி
6) பரீட்சை ஆணையாளர் நாயகம்
7) கல்வி வெளியீட்டு ஆணையாளரும் உ. க. ப. நி